# தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் பத்திரிக்கை செய்தி

தஞ்சாவூர் மாவட்டத்தில் சமூகப்பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கும் அரசினர் குழந்தைகள் இல்லம் (ஆண்கள்) மற்றும் அன்னை சத்யா அரசினர் குழந்தைகள் இல்லம் (பெண்கள்) ஆகிய இல்லங்களில் தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் மதிப்பூதியம் அடிப்படையில் ஆற்றுப்படுத்துதல் சேவை வழங்க தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பதவிக்கு தகுதியான உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதலில் முதுகலை பட்டம் பெற்ற நபர்கள் அவர்களது விண்ணப்பங்களை உரிய கல்வி சான்றுகளின் ஒளிநகலுடன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. தகுதியான நபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் தேர்வுக்குழு மூலம் நேர்முக தேர்வு அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.

அரசு ஆண்கள் இல்லத்திற்கு 3 பணியிடங்களும் அரசு பெண்கள் இல்லத்திற்கு 3 பணியிடங்களும் தேர்வு செய்யப்பட உள்ளனர். தேர்வு செய்யப்படும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு வருகையின் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு 60 நாட்களுக்கு மிகாமல் மதிப்பூதியம் அடிப்படையில் ஒரு வருகைக்கு போக்குவரத்து செலவு உட்பட ரு.1000 மட்டும் வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை தஞ்சாவூர் மாவட்ட https://thanjavur.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து தனித்தனியாக கண்காணிப்பாளர் அரசினர் குழந்தைகள் இல்லம் (ஆண்கள்) வ.உ.சி நகர் தஞ்சாவூர் - 613 007 என்ற முகவரிக்கும் கண்காணிப்பாளர் அன்னை சத்யா குழந்தைகள் இல்லம் (பெண்கள்) மேம்பாலம் தஞ்சாவூர் - 613 001 என்ற முகவரிக்கும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ 12.2.2021 மாலை 5 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைத்திட தெரிவிக்கப்படுகிறது.

2/2

மாவட்ட ஆட்சியர்
தஞ்சாவூர்

FORMAT

Application Form for the post of……………………………….

| | | | |
|---|---|---|---|
| 1 | Name of the Applicant | | Passport size photograph of the applicant to be affixed |
| 2 | Name of the Father /Husband | | |
| 3 | Date of Birth | | |
| 4 | Age as on 31.12.2020 | | |
| 5 | Gender | | |
| 6 | Native District | | |
| 7 | Marital Status | | |
| 8 | Address for Communication | | |
| 9 | Phone Number | | |
| 10 | Education Qualification | | |
| 11 | Additional Qualification | | |
| 12 | Religion and Community | | |
| 13 | Details of Working Experience | | |
| 14 | Any Political Activities | | |
| 15 | Any criminal cases registered | | |

Signature of the Applicant